# திரும்பி வந்த மான் குட்டி



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com

# திரும்பி வந்த மான்குட்டி

உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com

# திரும்பி வந்த மான்குட்டி

ஒரு காடு. அந்தக் காட்டிலே ஒரு மரத்தடியில் இரண்டு புள்ளி மான்கள் படுத்திருந்தன.

அவற்றிலே ஒன்று அம்மா மான்; மற்றொன்று குட்டிமான்.

அம்மா மான் தன் குட்டியைப் பார்த்து, "நீ எப்போதும் என் கூடவே இருக்கணும். தனியாக எங்கேயும் போய்விடாதே!” என்றது.

"ஏம்மா, தனியாகப் போகப்படாதா?" என்று கேட்டது குட்டிமான்.

"நல்ல வேளையாக இந்தக் காட்டிலே சிங்கம், புலியெல்லாம் இல்லை. இருந்தால், நம்மை அடித்துச் சாப்பிட்டு விடும். ஆனாலும் வேட்டைக்காரர்களால் நமக்கு எந்த நேரமும் ஆபத்து வரலாம்.”

"வேட்டைக்காரர்களால் ஆபத்தா! எப்படி அம்மா?"

"உன்னைப்போல் சின்னக் குட்டியாக இருந்த போது, நான் ஒரு வேட்டைக்காரனிடம் சிக்கிக் கொண்டு, படாதபாடு பட்டேன். அது மாதிரி உனக்கும் வந்துவிடக் கூடாது. அதற்காகத்தான்..." ...அம்மா மான் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, குட்டிமான் குறுக்கிட்டது.

"ஏனம்மா, உன்னை வேட்டைக்காரன் பிடித்துப் போய் விட்டானா? அப்புறம், எப்படித் தப்பி வந்தாய்?"

"குட்டியாக இருந்த போது, ஒருநாள், நான் துள்ளிக் குதித்துச் சென்று கொண்டிருந்தேன். ஒரு புதரைத் தாண்டி, அந்தப் பக்கமாக கால்களை வைத்தேன். என் கால்கள் அங்கு விரித்து வைத்திருந்த வலையில் சிக்கிக் கொண்டன. என்ன என்னவோ செய்து பார்த்தேன். கால்களை எடுக்கமுடியவில்லை. சிறிது நேரத்தில், உடம்பு முழுவதும் நன்றாக வலைக்குள் அகப்பட்டுக் கொண்டது. அந்தச் சமயம் பார்த்து வேடன் வந்தான். என்னை வலையிலிருந்து விடுவித்தான்; என் கால்களை நன்றாகக் கட்டித் தூக்கிக் கொண்டு போனான்."

“தூக்கிக் கொண்டு போனானா? எங்கே அம்மா?" என்று பரபரப்புடன் கேட்டது குட்டிமான்.

"என்னைக் கொண்டு போய், அவன் ஒருபெரியபணக்காரரிடம் விற்று விட்டான். அந்தப் பணக்காரரின் வீடு ரொம்பப் பெரிய வீடு. வீட்டைச்சுற்றிப் பெரிய தோட்டமும் இருந்தது. அவர் வீட்டில் இருந்த ஒரு பையனும் பெண்ணும் என்னைப் பார்த்ததும் துள்ளிக் குதித்து வந்தார்கள். தோட்டத்திலேயிருந்த ஒரு பெரிய கூடத்தில் என்னைக் கட்டிப் போட்டார்கள். எனக்கு ஒரே வருத்தம். 'இனிமேல் என் அப்பா அம்மாவைப் பார்க்கவே முடியாதே! மற்ற மான்களுடன் சேர்ந்து சுற்ற முடியாதே!' என்றெல்லாம் நினைத்து நினைத்து ஏங்கினேன்.

"அந்தப் பிள்ளைகள் என்னிடம் மிகவும் பிரியமாகத்தான் இருந்தார்கள்; என்னைக் கட்டி அணைத்துக் கொண்டார்கள்; கன்னத்தில் முத்தம் கொடுத்தார்கள்.

முள்ளங்கி, கேரட், முட்டைக்கோசு, தக்காளி, வாழைப்பழம் எல்லாம் கொண்டு வந்து கொடுத்தார்கள். நான் எதையுமே சாப்பிடவில்லை. பட்டினி கிடந்தேன். தண்ணீர் கூடக் குடிக்கவில்லை. தோட்டத்துக்குள் என்னை அழைத்துச் சென்றார்கள். நான் துள்ளி ஓடவில்லை; சோர்ந்து சோர்ந்து நின்றேன்.

“தினமும் பள்ளிக்கூடம் போகும் நேரம் தவிர, மற்ற நேரங்களிலெல்லாம் அந்த இரண்டு குழந்தைகளும் என் பக்கத்திலே இருப்பார்கள். நான் எதுவுமே சாப்பிடாமல் இருப்பதைப் பார்த்து அவர்கள் வருந்துவார்கள். தங்கள் அப்பாவிடம் என் நிலைமையை எடுத்துச் சொன்னார்கள்.

“அந்த அப்பாவும் யார் யாரையோ அழைத்து வந்து காட்டினார். என் வாய்க்குள் மூங்கில் குழாயை வைத்து அதன் வழியாகத் தண்ணீரை ஊற்றினார்கள். முள்ளங்கியையும், தக்காளியையும் நன்றாக அரைத்துத் தண்ணீரில் கலந்து பலவந்தமாக வாய்க்குள் செலுத்தினார்கள். அதனால், நான் சாகாமல் இருந்தேன். ஆனாலும், உடம்பு நாளுக்கு நாள் இளைத்தது. பத்து நாட்கள் இப்படிச் செய்து பார்த்தார்கள். பத்தாம் நாள் நான் சாய்ந்து படுத்து விட்டேன்.

“என் நிலைமையைப் பார்த்த அந்தப் பெண் குழந்தை, அவள் அப்பாவிடம், 'அப்பா, அப்பா, நாங்கள் சந்தோஷமாக இருக்கத்தானே இதை வாங்கினீர்கள்? ஆனால் பாவம், வந்தது முதல் இதற்கு உடம்பு சரியில்லை. துள்ளிக் குதிக்கவும் இல்லை; சாப்பிடவும் இல்லை.

"ஒரு நாள் அந்தப் பணக்காரர் வீட்டுக்கு வெளியூரிலிருந்து அவருடைய மாப்பிள்ளையும் அவருடைய உறவினரும் இரண்டு மூன்று கார்களிலே வந்து இறங்கினார்கள். அவர்களுக்குத் தடபுடலாக விருந்து வைக்க ஏற்பாடுகள் நடந்தன. சாயங்கால நேரத்திலே அவர்கள்

வீட்டுச் சமையல்காரன் எங்கள் அருகே வந்தான். என்னைப் பிடித்துத் தூக்கிப் பார்த்தான். பிறகு என்னோடு இருந்ததே, அந்த முயலையும் தூக்கிப் பார்த்தான். என்னைவிட அது கனமாக இருக்கிறது என்று சொல்லி, அதைத் தூக்கிக் கொண்டு சிறிது தூரம் சென்றான். சென்றவன், சட்டென்று அதன் கழுத்தைப் பிடித்துத் திருகினான். விழி பிதுங்கி அது உடனேயே இறந்து விட்டது! பிறகு, அதன் தோலை உரித்தான். கறி சமைக்கக் கொண்டு போனான். அதைப் பார்த்து என் உடம்பு நடுநடுங்கியது. உடனே தப்பித்து ஓடி வர நினைத்தேன். ஆனாலும், அந்தச் சிறு பெண் உமாவை விட்டுப் பிரிய மனம் வரவில்லை. அவ்வளவு தூரம் அவள் என்னிடம் பிரியமாக இருந்தாள். நம்மை ஒன்றும் செய்யமாட்டார்கள் என்று நினைத்துத் தொடர்ந்து அங்கேயே இருந்தேன்.

"இன்று அதிகாலையில், அந்த வீட்டுக்கு நாலைந்து பேர் ஒரு காரிலே வந்து இறங்கினார்கள். 'இவர்களுக்கு இங்கே விருந்து நடக்குமே! விருந்து என்றால் நமக்கல்லவா ஆபத்து!' என்று நினைத்தேன். இப்படி நான் நினைத்த சிறிது நேரத்தில், உமா என்னிடம் ஓடி வந்தாள்; சுற்றும் முற்றும் பார்த்தாள். பிறகு என்னைத் தூக்கிக் கொண்டு வெளியே வந்தாள்; வேகமாக நடந்தாள்; வெகுதூரம் நடந்தாள்.

# முன் கோபி ராஜா

வெங்காயபுரம் ராஜாவுக்கு எப்போதுமே முன் கோபம் அதிகம். அதனாலே அவரை எல்லோருமே 'முன் கோபி ராஜா', 'முன்கோபி ராஜா' என்றே அழைப்பார்கள். அவருடைய உண்மையான பெயர் என்ன என்பது எவருக்குமே தெரியவில்லை. ஆகையால், நாமும் அவரை 'முன் கோபி ராஜா' என்றே அழைப்போமா? சரி.

முன்கோபம் மிக அதிகமாக இருந்தாலும், அவருக்கு மூளை மிகக் கொஞ்சமாகவே இருந்தது.

அவருக்கு ஒரு மந்திரி இருந்தார். அவர் பெயர் அறிவொளி. பெயருக்கு ஏற்றபடி நல்ல அறிவாளியாக இருந்தார்; மிகவும் நல்லவர்.

முன்கோபி ராஜா திடும்திடுமென்று ஏதாவது முடிவு செய்வார். அது கெட்ட முடிவு என்றால், பட்டென்று சொல்லிவிடுவார் அந்த மந்திரி.

உடனே முன்கோபி ராஜாவுக்கு மூக்குக்கு மேல் கோபம் வந்துவிடும். "நான் ராஜாவா? நீர் ராஜாவா? நான் சொல்கிறபடி தான் நீர் நடக்க வேண்டும்" என்று சீறுவார்.

"நல்லது எது? கெட்டது எது? என்று எடுத்துச் சொல்லி, நல்லதைச் செய்யச் சொல்வதுதானே மந்திரியுடைய வேலை?" என்று மந்திரி சமாதானமாகச் சொல்வார்.